கவிமுளரி

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

கால்கோள் : 2023

25 அக்டோபர் 2023



வெளியிடுவோர்:

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

பேத்தாழை

முளரி 1

இதழ் 1

கவிமுளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

ISSN 3021-6680

கால்கோள் : 2023

Kavi Mulari Magazine

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர் படைப்பின் கீழ் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் முகவரியையும் இட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- புகைப்படம் இணைத்து அனுப்பலாம். (நாகரிகமானதாக இருந்தால் மட்டுமே இணைக்கப்படும்)
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக் கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

....

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

**"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"**

படங்கள் : Google

நற்கவிகளுக்கு
வணக்கம்,

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.

பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

அதன்வழியில்,
கன்னி இதழாக இம்மாத கவிமுளரி இதழ் வெளி வருகிறது.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,



உங்கள்,
-இதழாசிரியர்


2023.10.25

வாசிப்பை நேசிப்பதால்...

பாரதன் பற்பல பண்புணர்த்தி – மிக்க
பேரறிவு ஊட்டிடும் வாசிப்பு
மானிடர்க்கு நல்மதி அளித்து – கெட்ட
மனிதனையும் புனிதனாக்கும் வாசிப்பு
இறந்தகால நினைவை மீட்டு – இந்த
நிகழ்கால அறிவையூட்டும் வாசிப்பு
எதிர்காலத் திட்டமிடலைச் செம்மை – ஆக்கி
உலகையே சொந்தமாக்கும் வாசிப்பு

கண்டது கற்கப் பண்டிதனாக்கி – காதால்
கேட்போனை மேதையாக்கும் வாசிப்பு
வாழ்வை உணர்த்தி ஞானியாக்கி – நூலைத்
தேடுவோரைப் புலவனாக்கும் வாசிப்பு
எண்ணங்களை வண்ணங்களா யுருவாக்கி – உயர்
தன்னம்பிக்கையை வளர்க்கும் வாசிப்பு
நெஞ்சில் துணிவை நிலைநிறுத்தி – மிக்க
நேர்மைத் திறனளிக்கும் வாசிப்பு


ஆயிர மறிவுப் பொக்கிசங்கள் – அள்ளி
அடுக்கித் தந்திடும் வாசிப்பு
பாரினில் அறிஞர்களை உருவாக்கி – மேதினி
மெச்சிடப் போதிக்கும் வாசிப்பு
மாணவப் பருவச் சிறாருக்கு – மதியை
மனத்தில் பதிக்கும் வாசிப்பு
கற்றுக் கொள்ளும் காலத்தே – நன்கு
கருத்தூன்ற வைத்திடும் வாசிப்பு



கல்வியில் பலபடி முன்னேற – நல்ல
கலங்கரை விளக்கே வாசிப்பு
ஆளுமை மிக்க சந்ததியை – நன்கு
ஆக்கித் தருவதே வாசிப்பு
ஆண்டுதோறு மக்டோபர் வாசிப்பு – மாதம்
ஆக்கி தந்ததே வாசிப்பு
ஆக்கப் படைப்பு புரிதலுக்கு – மிக்க
அத்தியாவசிய மானதே வாசிப்பு

வாசிப்பின் வாசம் உங்கள் – புகழை
வானெங்கும் பரப்பி நிற்கும்
வாசிக்க வாசிக்க நமது – நிலையை
யோசிக்க உயர்த்தி வைக்கும்
வாசிப்பை மறந்து விட்டால் – வாழ்க்கை
வண்ணம் இழந்து விடும்
வாசிப்பைத் தொலைத்து விட்டால் – மனித
நேசிப்பும் பூச்சிய மாகிவிடும்

புதிய விடயங்களை அறிய – அரும்
பொக்கிசம் ஆகிடும் வாசிப்பு
நவீன இலக்கியச் செல்நெறிகளை – நன்கு
நல்கிடும் ஆசான் வாசிப்பு
எமது சந்ததியினர் எதிர்காலம் – அதனை
ஒளிமயம் ஆக்கிடும் வாசிப்பு
அறிவு அமைதி புதியன – நல்கி
பரிபூரண மனிதனாக்கும் வாசிப்பு.



ஆக்கம்:
மு.அருளம்பலம்
(ஆரையூர் அருள்)

இதய அலைவரிசையில்
தினம் தினம்
ஒலிக்கிறது
என்னவளின்
தேனின்பக் குரல்.

ஒவ்வொரு இடைவெளிக்கும்
வெவ்வேறு கானங்களாய்
ஒலித்துக்கொண்டே
இருக்கின்றது
அவளின் குரல்.



— கிண்ணையூர்
பிள்ளைக்கவி பிரசாந்.

சடுதிகள்

எக்கணத்திலும் எதுவும் நிகழலாம்
எதிர்பாராத விதமாக!

வாழ்வதற்கான திட்டமிடலோடு
சக ஜீவனை வருத்தாத வாழ்வாக...
அறத்தோடு கூடிய வகைத்திட்டுகள்
பின்தொடராத நிலையாக...
மனச்சுத்தத்தை விரிவாக்கி
ஒளிவெளி நோக்கி நட!

ஏனெனில்,
இங்கு எக்கணத்திலும்
எதுவும் நிகழலாம் எம் கண்முன்னே.



நேற்று
வெண்ணிலவு வெளிச்ச முற்றமொன்றில்
என்னோடு உரையாடிய நண்பன்
நடுநிசி நெருங்கும்வேளை
எனைவிட்டு எழுந்து போனான்.
புலர்காலைப் பொழுதில்
என்முன்னே வந்து நின்றான்
ஒரு செய்தியாக...

உணவை உண்டுவிட்டு
உறங்கப் போனவன்
'உறங்கியே' போனானாம்.

எதுவும் நிரந்தரமல்ல... என்பது
எனக்குத் தெரிந்த நிதர்சனமானாலும்,
அவனது உறக்கம் உண்மை என்பதை
ஏற்க மறுத்தபடி...
திரும்பிக்கொண்டிருக்கிறேன்
அவனைப் புதைத்த இடுகாட்டிலிருந்து...

– அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.



செந்தமிழ் நாளும் செப்பிடு தமிழா

(நிலைமண்டில ஆசிரியப்பா)

முந்தை நாகரிகம் செந்தமிழ் உரைத்திட
சிந்தை முழுவதும் சிறப்பு மேவுமே
பிஞ்சுக் கரங்கள் பற்றிய மகிழ்வை
நெஞ்சம் செப்பிய நம்தமிழ் தருமே
மாரியெனச் சொற்கள் மனதினைக் கவரும்
வீரியம் குறையா வீரத்தமிழ்ச் செப்பவே.

- கவித்தோழி சிவநந்தினி
கருணைபுரம், வாழைச்சேனை.



கண்ணாம்பூச்சி

காட்டிய மஞ்சள் சிறகுகளும்
சிறகுகளின் அசைவுகளும்
உனக்குரியனதான்

அழகுச் சிறகின் சிதைந்துபோன
மனக் குமுறலும் இச்சையும்
அதன் இருப்பாடமும்
என்னுடையதல்லவா...?

நீ,
வருகிறாய் என்றறிந்தால்
கண்களின் தடம்
கானகத்தைப் பற்றியிருக்காது
வனங்களின் மலர்வையும்
குளிர்ச்சியையும் கண்ட கண்கள்
கானகத்தின் இலையுதிர்வையும்
வாடலையும் காண
மறுத்ததன்
காரணம் என்ன?

மலர்களின் தேன் உறிஞ்சும்
வாழ்க்கை உனக்காகிறது
நினைவுகளைச் சுமக்கும்
இதயங்களின் வலி மட்டும்
தனிமையாகி விட்டது

காய்ந்து போன சருகுகளில்
வீசும் காற்றினைப் போல்
வீசும் நினைவுகள்தான் - எனக்கு
கண்ணாம்பூச்சி அளித்த
சிறப்புப் பரிசு.

பா.ஜீவிதரன்
பேத்தாழை, வாழைச்சேனை.



வெற்றியைத் தேடு...

மனித வாழ்க்கை
நிலையில்லா வேலி–அதில்
தடைகளை எதிர்த்தால்
தோல்விகளெல்லாம் போலி

முடியாது நடக்காது
என்றால் விடியாது – துணிந்து
முயலாமல் வெற்றி
இங்கு கிடையாது

முயற்சித்தால் நிச்சயம்
தோல்வி யில்லை – நீயும்
முயலா விட்டால்
எஞ்ஞான்றும் வெற்றியில்லை

நிற்காமல் ஓடு
இலக்கைத் தேடி – வரும்
நிகரில்லாப் புகழ்
உன்னை நாடி

காசுபணம் தேவையில்லை
கனிதரும் முயற்சிக்கு – எந்நாளும்
முயற்சியெனும் ஆயுதமே
விதையாகும் வெற்றிக்கு!

• • •

தாழையூர் செம்மொழியான்
ஜீ.ச.சுஜிதரன்.



அன்பின் சுடர்

முழுநிலவு என்னை
முத்தமிட்டே தழுவி
அன்பாக வருடி
பதமாக ஊட்டிடும்
நிலாச் சோறு
உண்ணும் வரம்
நித்தம் நித்தம்
வேண்டும் அம்மா.

–கிண்ணையூர்
தமிழாதினி கிந்துயா

மிதிவண்டிப் பயணம்

அறுசீர் விருத்தம்

(மா மா காய்)



ஆசை மனதில் அரும்பிடுமே
ஆர்வம் தானாய் உதித்திடுமே
மீசை முளைக்காப் பருவத்திலே
மெதுவாய்ப் பயணம் செய்வோமே
காசை நாளும் கொடுத்திட்டே
கருத்தாய் ஓட்டிப் பழகிடுவோம்
ஓசை காதில் கேட்டாலே
ஒதுங்கி நின்று பார்த்திடுவோம்.

உதிக்கும் காலைச் சூரியனாய்
உன்றன் வாழ்வு ஒளிவதற்கு
மிதித்துப் பயணம் செய்தாலே
மேன்மை பெறுமே உடல்நலமும்
நதியைப் போன்று நாள்தோறும்
நன்றாய்ப் பயணம் செய்தாயால்
விதியை நீயும் வென்றிடலாம்
வெற்றிக் கனியைக் கொய்திடலாம்.

அப்பா வாங்கித் தந்தாரே
அன்புப் பரிசாய் மிதிவண்டி
இப்போ எண்ணிப் பார்த்தாலும்
இனிமை தருமே அந்நினைவு
குப்பன் சுப்பன் எல்லோரும்
கூட்டுச் சேர்ந்து பயணித்தோம்
தப்பாய் ஓட்டி வீழாமல்
தப்பித் தவர்கள் யாருண்டு.

மடமை தன்னைப் போக்கிடவே
மங்காப் புகழைப் பெற்றிடவே
கடமை என்றே நினைப்பாயே
கருதிப் பயணம் செய்வாயே
உடலின் பருமன் குறைத்திடுமே
உள்ளம் தானாய் மகிழ்ந்திடுமே
திடமாய் உடம்பை ஆக்கிடுமே
தெவிட்டா இன்பம் தந்திடுமே.

பள்ளம் மேடு என்றாலும்
பாங்காய்ப் பயணம் செய்திடலாம்
உள்ளம் என்றும் எப்போதும்
ஊக்கம் தானாய்ப் பெற்றிடலாம்
குள்ள மாக இருந்தாலும்
குரங்குப் பாட்டில் அழுத்திடலாம்
கள்ளம் இல்லாக் குழந்தைக்கும்
களிப்பு மிகுதி அளித்திடுமே.

~கந்தலிங்கம் யேசுசகாயம் கிரான்.





செங்கமலத்தாள்



குனிந்தபடி குமரியொருத்தி
குறுக்கறுத்துச் செல்லுதம்மா...
குழந்தையென என் மனமோ
குதூகலத்தில் துள்ளுதம்மா...

செம்மணலில் செருப்பின்றியே
செங்கமலத்தாள் செல்வதேனோ...
செக்கெனவே என் சிந்தையவள்
சென்றவழி சுழல்வதேனோ...

நீர் சுமந்த குடத்தினையே
அவள் சுமந்தால் இடையினிலே...
என் பலம் குன்றிப் போனதம்மா
அவள் அன்னமொத்த நடையினிலே...

கண்டதுமே காதலுற்றேன்
கார்குழலாள் கலையினிலே...
கனவினிலே வாழ்ந்துவிட்டேன்
காலம் கடந்து அவளுடனே...

பின்தொடர்ந்தேன் பேதையவளை
என் காதலதைச் சொல்வதற்கே...
புன்னகைத்தால் ஒரு நொடியில்
என்னுள் வார்த்தையில்லை சொல்வதற்கே...

கயல்விழியாள் கரம் பிடித்தேன்
காதலதைச் சொல்லிவிட்டேன்
மறுத்துவிட்டால் மங்கை முன்னே
மறுநொடியே உயிர் துறப்பேன்...

– அலக்சனா,
பேத்தாழை, வாழைச்சேனை.

வாழ்க்கைப் புத்தகம்

பலரைப் படிக்கத் தவறி
சிலரைப் படித்து மகிழ்ந்து
தொடர்ந்து கொண்டே போகிறது
வாழ்க்கையெனும் புத்தகப்
பக்கங்கள்...

கண்ணீரும் கவலையும்
ஒரு பக்கம்
காதலும் இனிமையும்
மறுபக்கம்
கனவுகள் முயற்சிகள்
சோதனை வேதனை
எல்லாம்
ஏதோவொரு பக்கத்தில்
மாறி மாறி
வந்து பேசுகின்றன...

ஏமாற்றம் பலபக்கம்
எதை மாற்ற?
என்ற கேள்வியோடு
சிலபக்கம்
அழகான புத்தகம் தான்
ஆனாலும்,
அழுகையையும் மறைத்து
வைத்துள்ளது
அதுதான்
அதன் அற்புதமோ...?

வறுமை, பெருமை
வாய்ப்பு, இழப்பு
கறுப்பு, வெள்ளை
பொறுமை, அன்பின் குணம்
எல்லாமே
அது கற்றுக்கொடுத்த
அன்பின் பாடம் தான்...

என்னைப் போன்றும்
உன்னைப் போன்றும்
எல்லோர் வாழ்வையும்
எடுத்துக் கூறும்
எழுத்தின் விந்தை தான்
வாழ்க்கைப் புத்தகம்
படிக்கத் தவறிவிடாதே...

- - - - - - - - -

கவிஞர்
-ஆண்டியூர் இரா.நிதன்.



கும்மாளம்

விடுமுறை விட்டதும்
தொடங்கியது கொண்டாட்டம்
புத்தகச் சுமையின்றி
பூவானது உடம்பு

விடுதலை என்றே
கும்மாளமிட்டது மனது
வயற்காடு தோட்டமென்று
சுற்றின கால்கள்



ஆற்றோரம் சென்றதும்
ஆனந்தக் காட்சியது
கெண்டையும் விராலியும்
துள்ளிக் குதித்தன

எடுத்தோம் விரிப்பினை
விரித்தோம் வலையாய்,
பிடித்தோம் கயல்களை
பிரித்தோம் சரிபாதியாய் .

கவிஞர் மீராஸ்ரீ
தமிழ்நாடு.

.....கசல் துண்டுகள்.....

பறவை இருக்க விழும்
பூக்கள்போல்
நீ இருக்கும்
இடங்களிலெல்லாம்
மணமாய் விழுகிறேன்.

உன் நினைவுகளை
ஓவியமாக வரைந்திருந்தேன்
காலம் அழித்துவிட்டதே
காலத்தை நொந்து
என்ன பயன்
காலமாகவும்
நீ.

இதோ
இறந்த என் ஞாபகங்கள்
உன்னைக் கண்டதும்
உயிர்த்தெழுகின்றன.

அசைவற்றுக் கிடந்தேன்
இசைவற்று நிலம்தாழ்த்தி
உணர்வற்றுப் பிளந்து
செல்கிறாய்.

நான் பிறந்ததும்
பிரிவதும்
இறப்பதும்
உன்னை
அடைவதற்குத்தான்.

யாரோ சொன்ன
கதைபோல்
நீ தொடக்கமும் முடிவும்
இல்லாதவள்.

கண்ணீரில்
உன்னை எழுதினேன்
முடிப்பதற்குள்
உலர்ந்துவிட்டாய்.

கவிஞர் இர்ஷாத்,
வாழைச்சேனை.

கூடாது...

கயவர்கள் கால் பதிக்கும்
இடங்களின் நாற்றங்கள்
என் மூக்கின் நுனியிற்கூட
முகம் பதிக்கக் கூடாது...

வாக்குச்சாவடிகளில் நீதி
சாகடிக்கப்படும் தருணங்களைப்
பார்க்கக்கூட
என் மையிட்ட விரல்
நகரக் கூடாது...

காசு இருந்தால்
கருப்புக்கோட் கைகளில்
சிறு கோல் கேட்டால்
பட்டதாரி என்ற எடுகோல்
இக்கல்வி வியாபாரத்தில்
சத ரூபாய்க்குக்கூட
நான் விற்பனையாகக் கூடாது...

பெண்ணடிமைச் சாசனங்கள்
இன்னும் சாகவில்லையென்ற
சாக்கடைப் பேச்சுக்கள்
என் கம்மலின் காதிற்கூட
கேட்டுவிடக்கூடாது...



பேருந்துகளில் யாசகம்
கேட்டுவரும் யாசகர்களுக்கு
பின்னால் இருக்கின்ற
ஏதோவொரு அரசியல்கூட
என் சிந்தனையைக் கிளறக்கூடாது...



மரங்களை வெட்டி
கட்டடங்கள் வளர்க்கும்
வேடிக்கை மனிதர்களோடு
வாடிக்கையாய்க்கூட என் கை
குலுக்கி விடக்கூடாது...

யோசிப்பவரெல்லாம்
யோக்கியமானோரல்லர்
விலகி நிற்பதால்
உலகம் உய்யாது
கடந்து போவதால்
எதுவும் நடக்காது

அப்படி இருக்கக்கூடாது
என விமர்சிக்காது
எப்படி இருக்க வேண்டும்
என நடப்பிப்போம்.

-தமிழூராள் அனுஷ்திக்கா
வாழைச்சேனை.

இயற்கையும் காதலும் ஒன்றே

(எண்சீர் விருத்தம்)

பச்சை மெத்தை விரித்த அழகில்
பகலும் இரவும் ஒன்றாய் மாற
இச்சை கொண்ட புவியின் மகளோ
இன்பம் பொங்கித் தழுவும் வேளை
துச்ச மென்று நினையா வண்ணம்
தூய காற்றும் வீசி நிற்க
மெச்சு கின்றேன் இயற்கை அழகை
மேனி முழுதும் காதல் கொண்டே.

கொண்ட காதல் கொல்லும் என்னைக்
கொள்ளை அழகின் கோடி யின்பம்
கண்ணில் காணும் காட்சி யாவும்
கனவில் தோன்றி நினைவில் நிற்கும்
பெண்ணின் வதனம் பேதை யாக்கிப்
பேசா நிலைக்கே என்னை மாற்றும்
உண்ணும் உணவும் மறந்து போகும்
உயிரும் உணர்வும் அவளென் றாகும்.

இயற்கை தந்த காதல் மயக்கம்
இன்பம் பெருகிப் பதியும் நெஞ்சில்
தயக்கம் வேண்டாம் தத்தை மனத்தைத்
தழுவும் காலம் விரைவில் உண்டாம்
உயர்வு தாழ்வு வேறு பாடோ
உயிரில் கலந்த பின்னர் உண்டோ
பயிரில் பசுமை நீங்கி விட்டால்
பாவம் அதுவும் வாழா தன்றோ.

காதல் கொண்ட உயிரு மிங்கே
காலம் நோக்கும் பயிரை ஒக்கும்
ஊதக் காற்றில் மோகம் கொள்ளும்
ஊடல் கூட இன்பம் பெருகும்
வாதம் பித்தம் எல்லாம் தீரும்
வாடும் பயிரும் வளத்தைக் காணும்
மோத லில்லை இனிமேல் என்றும்
மோகம் தீர்க்க மழையும் பொழியும்.

மண்ணில் வாழும் உயிர்கள் எல்லாம்
மங்காக் காதல் உணர்வில் சமமாம்
விண்ணில் கூடும் மேகம் யாவும்
விரைந்தே மழையைப் பெய்தல் இயற்கை
எண்ணில் எழுத்தில் எடுத்தே சொன்னேன்
எங்கும் பசுமை வாழ்க்கை நியதி
வண்ணம் கொண்ட வானில் நிலவும்
வலமும் வந்தே குளிர்ச்சி தருமே.

||||||||||||||||||||||||||||||||||||||||||||||||||||

பாவலர் சரஸ்வதி பாஸ்கரன்
தமிழ்நாடு.

படிக்காமல் பரீட்சைக்கு தோற்றிப்பார் ...!

தாய் மொழியே
தடுமாறும்
பார்த்தெழுதி
பாஸாக நினைப்பாய்
நிமிடங்கள் கூட
நிதானமாய்க் கழியும்
கடிகாரத்தின் முள்ளுடன் சுற்றிக்
கழுத்தும் கடுக்கும்
நேரத்தைக் கடத்த
நிம்மதி இழப்பாய்

படிக்காமல் பரீட்சைக்குத் தோற்றிப்பார் .!



பக்கத்தில் இருப்பவர்
கடவுளாய்த் தெரிவர்
விழிகளால் விடைதேட
வலைவீசுவாய்
மற்றவர் தாளில்
தாகம் எடுக்கும்
நோக்குனர் முகத்தை
முகமலர்ந்து நோக்குவாய்
திரும்பவிடா நோக்குநர் மீது
வெறுப்பம்பைப் பாய்ச்சுவாய்

படிக்காமல் பரீட்சைக்குத் தோற்றிப்பார்...!

விடை எழுதுபவர்
விரோதியாய்த் தெரிவர்
சகபாடியைக் கூப்பிட்டு
பகிடிக்கு இழுப்பாய்
விரல்கள் எண்ணியே
விரக்தி வரும்
நிதானமாய் இருந்தே
நிம்மதி கெடும்
சொறிந்த காயங்கள்
சிரசில் தோன்றும்

படிக்காமல் பரீட்சைக்கு தோற்றிப்பார்...!

படம் வரையத் தோன்றும்
கவிதை எழுத முயல்வாய்
படித்துவந்து இருக்கலாமமென
மனமது குமுறும்
உன்மீது நீயே
கோபங் கொள்வாய்
எனக்காக இன்னொருத்தர்
படித்து வருவர் என்பதன்
பிழை உணர்வாய்



-கிண்ணையூர் சிவதர்ஷன்
(ஆசிரியர்)

படிக்காமல் பரீட்சை எழுதிப்பார்...!



எங்கே மனித நேயம்...?

மனிதன் மறந்த
மனித நேயம்
கண்களை குருடாக்கி
வழி சொல்லும்
விநோத மக்கள்.
வீதியில்
வேடிக்கையாய் கூட்டம்.
நடப்பது நாடகமல்ல
நம் மனதை உலுக்கும்
கொடூர சம்பவம்.
ஒருவனை
சிலர் துரத்த –பலர்
பார்வையாளர்களாக
படுகொலை நடந்தேர்கின்றது
மக்கள் பலர்
சாட்சியோடு
தடுக்கும்
எண்ணமும் இல்லை
யாரும்
தடுக்கவும் இல்லை
உச்சி கொட்டி
வெட்டிப் பேச்சில்
வீணடிக்கும் இந்த
மக்கள் மத்தியில்
தேடித் தேடி
ஓடினேன் கிடைக்காத
மனித நேயத்தை
ஏன் இப்படி –என்ற
கேள்வியோடு
கேள்விக்குறியான
மனித நேயத்தை
நினைத்து!

வி.அபிவர்ணா
மூங்கிலாறு வடக்கு,
முல்லைத்தீவு.

உளங்கவரும் மருதநகர்

மட்டு நகரினுள்ளே மீன்கள் பாடும் ~ அங்கு
வாழையூர் மலரின் தண்முகையாம் மருதநக ராகும்
விடியும் முதல் விழிப்பு நாளும் ~ பாடும்
சிட்டு குருவியின் சீர்மிகு ஒலியோடும்

சாயங் காலம் சாலை ஓரம் ~ ஓயாது
உவந்து விளையாடும் மழலைகளே மருந்தாம்
அருகில் துயிலும் இரும்பு பாதையில் ~ தேயாது
காலையிலும் மாலையிலும் கடகடக்குமே ரயிலாம்

சிறுநகரில் என்றுமே இயற்கையின் ஆட்சி ~ நாளும்
பகலவனின் செவ்வொளியின் பழுதற்ற மாட்சி
சந்திரனின் வழிப்பினால் அழகேறும் நகரில் ~ நிறைந்து
நெஞ்சிக்கு சுகமளிக்கும் கண்கொள்ளாக் காட்சியே.

கவிப்பற்றான் சலோஜன்,
மருதநகர்.

கொள்ளை இன்பம் இருக்கு...!

வாழ்க்கையை வாழத்தான்
வானவில் போல வந்து
வசந்தத்தை விதைக்கிறது
வளமான வாசிப்பு!

கையிலேந்திய புத்தகங்கள்
தலையெழுத்தை மாற்றிய கதை
நித்தம் கூறி முன்னேறுது
சத்தமில்லாத ஒரு பிரபஞ்சம்!

குருதி அழுத்தம் குறைக்க மட்டும்
குறைவாக வாசிப்போர்
மறக்காமல் அத்தனையும்
மொத்தமாய் அறியுங்கள்!

கீச்சகத்தில் கிறுக்கி தினம்
கூச்சலிடும் இளையோர்
நூலகத்தின் வாசலையாவது
வாரம் ஒருமுறை பார்க்க வாருங்கள்!

கண்டதும் கற்கும் பண்டிதன் வேண்டாம்
கண்டவர் முன் மண்டியிடாமல்
பேதங்கள் இன்றி போதனை செய்யும்
வேதம் தாண்டிய வேங்கைகள் போதும்!

தனிமைக்கு மருந்தாய்
இனிமைக்கு விருந்தாய்
நூல்களை அருந்தி நீங்கள்
வாசிப்பின் தாகம் தீருங்கள்!

பாரம் குறைத்து நேசிக்க
நேரம் ஒதுக்கி வாசியுங்கள்!
தூரம் ஏதும் சென்றாலும் – நெஞ்சில்
ஈரம் அதை வையுங்கள்!

~ அம்றிதா ஜெயரஞ்சித்
வாழைச்சேனை.



புன்னகை தேசத்தில் புலரும் கனவு



மெட்டில் ஒட்டிய தாளப் புட்கள்
மேடையில் பொழியுது இசையின் தூறல்
காற்றிடை வெளியில் கலவரம் கரைய
கருணை வெள்ளம் தலையை மீறுது

ஆசைப் பூக்கள் மீசை முளைத்து
ஆனந்தத் தாண்டவம் அதிலே ஆடுது
ஓசை கொண்ட மணியின் வீச்சும்
ஒன்பது திங்களின் ஒளியில் பாயுது

பகலில் ஒளிந்த விண்மீன் கூட்டம்
பால் வீதியில் பல்லைக் காட்டிட
சாளரம் தேடி நாணல் வளைந்து
சடுதியின் காற்றைத் தென்றலாய் வீசுது

மேகம் கழற்றிய கருமையின் வண்ணம்
மெல்லின விழியில் காட்சியைத் தீட்டிட
புயலுக்கு பயந்த புழுதியின் மண்டலம்
பூமியில் மெல்ல இசைந்து தழுவுது

இத்தனை புதினம் புதிதாய் நிகழுது
இன்றே மடியும் ஈசல் கேட்டது
புதிய பாசத்தில் மலரும் நினைவு
புன்னகை தேசத்தில் புலரும் கனவு...

– சம்பூர் சமரன்,
திருகோணமலை.

நிஜமா...? நிழலா...?

போலியான உலகில் பொய்யான வேடங்கள்
பொய்மை வாழ்வுதனில்
தன்னை போர்த்தி நடிக்கும் வேடர்கள்
யாம் மனிதர்கள்...!

நிஜம் எதுவோ? அதுவே நீயறியா நிழல்
வேடிக்கை மனிதர் கூட்டத்தினுள்
வேடிக்கை பார்ப்பவனாய் இருக்கிறோம்
இங்கு நீயும் நானும்...!

அகிலத்தில் அற்பனுமில்லை அசடனுமில்லை
அன்பு வார்த்தை அறிவை மயக்கிடும் போதை
நிஜமா யிருக்கும் நம்பிக்கையும்
நிழலாய் மறையும் சில நாட்களில்...!

நிஜமறியாது முட்டிக்கொள்ளும் மூடர்கள்
அகோரமாய் அவதியுறும் பூமித்தாய்
நிஜமாய் நீடிக்கும் இவை யாவும் காத்திருக்கின்றன
யாவும் நிழலென உணர்த்தவே...!

நிஜத்தினை அறிகையில் அகைத்த உருவம்
உற்பமடைகளில் உணர்வாய்
நிஜமே நிழல் நிழலே நிஜமாகிட
அதுவே அகதித மெய்ஞ்ஞானமாய்...!

வளர்கவி
வாழையூர் அபி.

அழகிய தேசத்தை உருவாக்க....

ஆழ்ந்த சிந்தனைகள் ஆக்கத்திற்கு உரமே
வீழாது நாளும் வீறுடன் எழுந்திடு
சோம்பறியாய் இருந்து சோர்ந்து விடாதே
சாம்பலில் இருந்தும் சாதனை படைத்திடு

தூய எண்ணத்தோடு துணிந்து செயற்படு
தீய எண்ணமதைத் தீயிட்டுக் கொளுத்திடு
நல்ல எண்ணங்களை நல்லோர்க்கு உரைத்திடு
கல்லாமை யகற்றிக் கல்வியைப் புகட்டிடு

சுத்தமான காற்றைச் சுவாசிக்க வழிவிடு
நாற்றிசையும் நலம்பெற ஏணியாய் நின்றிடு
சித்த மெல்லாம் சிறந்தவை நினைத்திடு
இத்திரு உலகிடை இன்புற்று மகிழ்ந்திடு

அதிகாரப் போர்வையை அடியோடு அகற்றிடு
சதிகாரக் கூட்டத்தைச் சஞ்சலமின்றி அழித்திடு
சதியழிக்கும் கவிகளைச் சாட்டையென அளித்திடு
செழிப்போங்கும் திருநாட்டைச் சேர்ந்தே காத்திடு

கைத்தொழில்கள் எல்லாம் கையாண்டு வளர்த்திடு
சத்தான உணவுகளைச் சந்ததிக்கு வழங்கிடு
மரங்களைக் காத்து மண்ணையும் பேணியே
மகத்தான தேசத்தை உருவாக்க முனைந்திடு.

வளர்கவி
பாஸ்கரன் குதுஜன்
கிரான்.

உளியவன்

வலிகள் பலகடந்து வலிமை பலகொண்டு
தனக்காக அன்றி தரணிக்காகவே
உழைத்திடும் உயர்வர்க்கத்தவனை
உலகமே போற்றிடல் நன்று...

கொதிக்கும் நீராய் மனமும் வெந்திட
குலப்பெருமை காக்க உழைத்திடுவான்
வெயிலில் நின்று வேகினாலும்
ஏசியில் இருந்தது போல குழைந்திடுவான்



தன் சுமை மறைப்பான்
தன் குடும்பம் வருந்திவிடக் கூடாதென்றே
தண்ணீரும் மறப்பான்
தன் பணி நிறைவாக்கவே

கள்ளம் இல்லா மனமும்
காப்புக் காய்த்திட்ட முதுகும்
கருவாடாய் வெந்திட்ட அவர் பாதங்களும்
வணங்கிட வடிவம் அமைத்திடும்

காலம் எல்லாம் உழைத்திடுவர்
கழுத்தில் ஒரு சவரன் தங்கம் இல்லை
வாழும் நாளையும் மற்றவர்க்காய்
சாட்சி இன்றியே எழுதி வைப்பர்

மே தினம் என்று ஒன்று
அன்று மட்டும் ஒலி பெருக்கியைக் கொண்டு
ஒலி பெருக்க வேண்டும் என்பதற்காய்
ஒரு கூட்டமே அலையும்!

ஒரு நாள் மட்டும்
உழைப்பவனின் உரிமை குரல்
கேக்க வந்திடுவோம்
மற்ற நாளில் பழைய சித்தாந்தந்தான்

ஒவ்வொரு நாளும்
உழைப்பாளியைப் போற்றுவோம்
உலகைச் செதுக்கிட
தன்னையே உளியாக்குபவன் அவன்.

-மருதமூர்
இளங்கவி ஜிதர்சினி.



மட்டுநகர்

பூவிரியும் தேன்நகராம்
வாவிக்கரையிலே
பொன் விளையும் பூமியடா
ஆற்றங்கரையிலே
காற்கொலுசின் ஓசையைப்போல
மீனின் ஒலியிலே
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக்கரையிலே...

பாய் விரிக்கும் நீர்நிலையில்
தோணிகள் கூட்டம்
பக்குவமாய்ப் பறந்து செல்லும்
பறவைகள் கூட்டம்
காரிருளின் ஓசையிலே
கடலலைகள் கூட்டம்
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக்கரையிலே...

ஏர்பிடித்து நிலம் உழுதும்
காளையர் போல
கல்வியொன்றே இலட்சியமாய்
பெண்களைப் போல
பார் முழுதும் வியந்து பார்க்கும்
பாமரனைப் போல
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக் கரையிலே...

ஏழை அழுத கண்ணீரை
பசியெனச் சொல்வார்
பூமி அழுத கண்ணீரை
எரிகுழம்பென்பார்
தமிழ் அழுத கண்ணீரை
வரலாறு என்பார்
மட்டுநகர் உறங்குதம்மா

பூங்குழலின் ஓசையிலே
இசையினைச் சொல்வார்
காற்சலங்கை ஓசையிலே
கவிதைகள் சொல்வார்
நாட்டுப்புறக் கூத்தினிலே
இலக்கியம் சொல்வார்
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக் கரையிலே...

வானுயரக் கட்டடங்கள்
உயர்ந்தே செல்லும்
வான்மயிலின் தோகையைப்போல்
அழகினைக்கூட்டும்
தேன்மதுரத் தமிழோசை
செவிகளில் கேட்கும்
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக் கரையிலே...

சாதிமத பேதமில்லா
அழகு நகரிலே
புத்தன், யேசு, நபிகளெல்லாம்
கோயிலருகிலே
வானவில்போல் வளைந்து நிற்கும்
மதங்கள் நடுவிலே
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக் கரையிலே...

வந்தாரை வாழவைக்கும்
தமிழரின் பெருமை
வள்ளுவனின் குடிவழியில்
பிறந்தது பெருமை
திருமூலர் குலவழியில்
வந்தது பெருமை
மட்டுநகர் உறங்குதம்மா
வாவிக் கரையிலே...

-ஈழத்துக் கவிஞர்
வில்சன் சுதாகர்

மரகதப் பருவம்

மரகத மணியன்ன
மாணவப் பருவம்
மதியினைக் கொண்டு
அணைத்திட வரம்

அறிவினைப் பெற்றிட
அகத்தினைத் திருத்தி
ஆசைகள் களைந்திட
இளமையே நலம்

இன்பம் மட்டுமே
நாடும் பருவம்
ஈகையும் ஈரமும்
பழகுதல் தவம்

உரமது உள்ளத்தில்
ஊற்றெடுக்க நாளும்
ஊரும் போற்ற
உயர்ந்திடும் பருவம்

எல்லையில்லா எதிர்ப்புகள்
எதிர்த்துத் தள்ளி
ஏராம் கல்வியை
ஏந்திடும் பருவம்

ஐம்புலன் அடக்கி
ஐயம்தெளியக் கற்று
ஒழுக்கமுடன் வாழப்
பழகிடும் பருவம்

ஓயாது படித்து
தேயா கல்வியை
ஔடதமாய்ப் பெற்றிடும்
அழகான பருவமே.



-வளர்கவி தேனுஜன்
விநாயகபுரம்.



கவிதை

புரட்சிக்கு

வேர்.

— காரிருளன்.

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை

9773021668009